Judicial Form No. 53

[See Rule 42]
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
.............
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,PAPPIREDDIPATTI

Calendar Case No.C.C.No. 52/2026

Deposition of Sworn Statement

| | |
|---|---|
| Name | : புஷ்பாகரன் **(** காவல் உதவி ஆய்வாளர்**)** |
| Father's Name/Husband Name | : தேவராஜ் |
| Village | : தர்மபுரி |
| Taluk | : தர்மபுரி |
| District | : தருமபுரி |
| Caste | : |
| Calling | : PW3 |
| Religion | : Hindu |
| Age | : 46 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 19.06.2026

**எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை.**

நான் தற்போது அரூர் மதுவிலக்கு அமலாக்க பிரிவில் காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன்.

கடந்த 01.10.2025 ம் தேதி பகல் 12.00 மணி நான் பணியில் இருந்தபோது எனது தலைமையில் நானும் என்னுடன் அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகியோருடன் எனக்கு கிடைத்த தகவலின்பேரில் மது விலக்கு குற்றம் தடுப்பு சம்பந்தமாகபொம்மிடி காவல் நிலைய எல்லைக்குட்பட்ட கருங்கலூர் கிராமத்தில் அருகே கண்காணித்து கொண்டிருந்தபோது ஆஜர் எதிரியின் வீட்டின் பின்புறம் சந்தேகத்தின் பேரில் சோதனை செய்தபோது 180 ML அளவு கொண்ட Black Pearl Brandy 26 பாட்டில்களை வைத்திருந்தார். எதிரி எங்களை கண்டவுடன் தப்பிஓட முயன்றவரை போலிஸ் பார்டி உதவியுடன் பிடித்து விசாரித்தபோது அவர் அரசு மதுபானத்தை மொத்தமாக வாங்கி வந்து பொதுமக்களிடம் சில்லரையில் பாட்டில்களை அதிக விலைக்கு விற்பனை செய்ய வைத்திருந்ததை ஒப்புக்கொண்டார். எதிரியை நான் அந்த இடத்திலேயே கைது செய்தேன்.

மேலும் தனிநபர் சாட்சிகள் யாரும் இல்லாததால் என்னுடன் வந்த காவலர்கள் முன்னிலையில் எதிரியிடம் இருந்து 180 ML அளவு கொண்ட Black Pearl Brandy 26 பாட்டில்களை கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றினேன்.

கைப்பற்றுதல் மகஜர் ஏற்கனவே அ.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

கைப்பற்றப்பட்ட மது பாட்டில்கள் மற்றும் எதிரியுடன் நிலையம் வந்தடைந்தேன் எதிரி மீது அரூர் மதுவிலக்கு அமலாக்க பிரிவு குற்ற எண் 418/2025 சட்டபிரிவுகள் 4(1)(C) TNP ACT படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன் **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

பின்னர் சம்பவ இடத்தில் கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்துகளை தர்மபுரி மாவட்ட மதுவிலக்கு ஆயத்தீர்வை அலுவலரான ஆணையர் உத்தரவின் பேரில் வழக்கு சொத்துகளை நிலைய இருப்பில் வைத்து பின்னர் இரண்டு தனிநபர் சாட்சிகள் மற்றும் மாவட்ட மேலாளர் டாஸ்மார்க் அவர்களின் முன்னிலையில் கொட்டி அழிக்கப்பட்டது.

எதிரியை நிலைய பிணையில் விடுவித்தேன்.

சாட்சிகள் 1 மற்றும் 2 ஐ தனிதனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

அத்துடன் எனது புலன் விசாரணையை முடித்து 01.10.2025 ம் தேதி எதிரிக்கு எதிராக 4(1)(C) TNP ACT படி இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை.**

அரூர் மதுவிலக்கு அமலாக்க பிரிவு காவல் நிலையத்திற்கும் சம்பவ இடத்திற்கும் 45 கிலோ மீட்டர் இருக்கும்.

எதிரி அரசு மதுபான பாட்டில்களை கள்ளதனமாக அதிக விலைக்கு விற்பது சம்பவத்தன்று காலை தகவல் கிடைத்தது.

சம்பவ நேரம் 12 மணி என்றால் சரிதான்.

முதல் தகவல் அறிக்கையில் சம்பவ நேரம் 13 மணி என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யும் நேரம்.

சம்பவ இடத்தில் யாரும் இல்லாததால் தனி நபர் சாட்சிகள் யாரையும் சேர்க்கவில்லை.

நான் சம்பவயிடம் செல்லாமல் புள்ளி விவரத்திற்காகஇந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு படித்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு என் முன்னர் கையொப்பம் செய்தார்.**

**நீதித்துறை நடுவர் பாப்பிரெட்டிபட்டி.**